செ.வெ.எண்: 51 /ஏப்ரல்/2020 நாள்: 17.04.2020.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, 144 தடை உத்தரவு உள்ள காலகட்டத்தில் பேக்கரிகள் (அடுமனைகள்) திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். அவ்வாறு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திறந்து விற்பனை செய்யும் பட்சத்தில் விற்பனையாளர்கள் கீழ்கண்ட வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப.,அவர்கள் அறிவித்துள்ளார்.**

----------------

கடந்த 20 நாட்களாக பேக்கரிகள் மூடியிருந்த காரணத்தினால் தங்கள் கடையில் உள்ள அலமாரிகள், பேக்கரி பொருட்கள் வைக்கும் இடம், தயாரிப்பு கூடம், தயாரிக்க பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியவற்றை முறையாக சுத்தம் செய்து அதன் பின்னரே தங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையை தொடர வேண்டும்.

1. மேலும் திடீரென அறிவிக்கப்பட்ட தடை உத்தவின் காரணமாக, உடனடியாக கடைகளை மூடியதன் காரணமாக, அன்றைய பொழுது தயாரித்து விற்பனையாகாமல் உள்ள அனைத்து பொருட்களும் தற்பொழுது காலாவதியாகி இருக்கும் என்ற காரணத்தினால் அவற்றை முறையாக அழித்துவிட வேண்டும். புதிதாக தயாரிக்கும் பேக்கரி பொருட்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.
2. மேலும் கடைகளில் ஏற்கனவே பொட்டலமிடப்பட்ட உணவு பொருட்களான (Pre Packed Food) பிஸ்கட், சிப்ஸ் முதலிய உணவுப் பொருட்களின் பயன்பாட்டு தேதி முடிவடைந்து விட்டதா என பார்த்து விற்பனை செய்யவும்.
3. பேக்கரியில் உணவு பாதுகாப்பு துறையின் மூலம் பெறப்பட்ட உரிமம் சான்றினை பார்வையில் படும் வகையில் வைத்திருக்க வேண்டும்.
4. தங்கள் பேக்கரிகளில் பார்சல் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. அங்கேயே அமர்ந்து உண்பதோ அல்லது டீ, காபி மற்றும் குளிர்பானங்கள் அருந்த அனுமதிப்பதோ கூடாது. டீ, காபி முதலிய பானங்களை தமிழக அரசின் தடை காலம் முடியும் வரை தங்களின் கடையில் தயாரித்து விற்பனை செய்யக் கூடாது.
5. தங்கள் பேக்கரியில் தயாரித்த பொருட்களை பொட்டலமிடப்பட்டு விற்பனை செய்யும் பட்சத்தில் உணவு பாதுகாப்பு துறையால் குறிப்பிடப்பட்ட அனைத்து அம்சங்களுடன் கூடிய லேபிள் இட்டு, அதன் பிறகே விற்பனை செய்ய வேண்டும். முக்கியமாக தயாரிப்பு தேதி மற்றும் பயன்பாட்டு தேதி கண்டிப்பாக இருக்க வேண்டும்.
6. பொட்டலமிட பயன்படுத்தும் பொருட்கள் அனுமதிக்கப்பட்ட உணவு தரத்துடன் (FOOD GRADE) கூடியதாக இருக்க வேண்டும். மேலும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் செய்திதாள்களை பொட்டலமிடப் பயன்படுத்தக் கூடாது.
7. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, பேக்கரி கடைகள் மட்டுமே இயங்க அனுமதிக்கப்படுகிறது. டீ கடைகள் இயங்க அனுமதி இல்லை.
8. பேக்கரியின் பணியாளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை நிறுவன உரிமையாளர்களால் வழங்கப்பட வேண்டும்
9. பணியாளர்களை அழைத்து செல்லும் வாகனத்திற்கு உரிய அனுமதி சீட்டு பெற்று இருத்தல் வேண்டும்.

10. பேக்கரி பணியாளர்கள் முக கவசம் அணிய வேண்டும். கையுறை, தலைமுடி கவசம் ஆகியவற்றை கண்டிப்பாக அணிய வேண்டும்.
11. பணியாளர்கள் பேக்கரிக்குள் செல்லும் முன்பும் பேக்கரியை விட்டு வெளியே செல்லும் போதும் மட்டுமல்லாது வேலை நேரத்திலும் அடிக்கடி கைகளை சோப்பு பயன்படுத்தி நன்றாக கழுவிட வேண்டும்.
12. பணிளார்களுக்கிடையே சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்.
13. பணிளார்கள் எவருக்கேனும் சளி, இருமல், காய்ச்சல் இருந்தால் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பிட வேண்டும். அவரை பேக்கரியில் பணி புரிய அனுமதிக்கக் கூடாது.
14. பேக்கரிக்கு பொருட்களை வாங்க வரும் பொது மக்களையும் சமூக இடைவெளியை பின்பற்ற செய்திடல் வேண்டும்.
15. பேக்கரியில் பிரட், பன், ரஸ்க் மற்றும் பிஸ்கட் ஆகியவற்றுடன் இன்னபிற திண்பண்டங்களையும் தயாரித்து விற்பனை செய்யலாம்.
16. பேக்கரிகள் காலை 6.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மட்டுமே இயங்க வேண்டும். பேக்கரிகள் இயங்குவதற்கான அனுமதி நேரத்தை தமிழக அரசு பின் வரும் காலங்களில் மாற்றி அமைக்கும் பட்சத்தில், பேக்கரி உரிமையாளர்கள் அரசால் வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் மட்டுமே செயல்பட வேண்டும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**